<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No. 61 / 2023</u>

PW : 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி . சாந்தகுமாரி | க /பெ. | | |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் 06 ஆம் தேதி ..................... பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ், M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**<u>06.08.2024</u>**

<u>முதல் விசாரணை</u>

நான் எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மையானவை. அந்த சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞருக்கு கூறினேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 08.07.2022 தேதியிட்ட முதல் தகவலறிக்கை, அச்சரப்பாக்கம் காவல் நிலையம் உண்மை நகல் ம.சா.ஆ 1, 09.07.2022 தேதியிட்ட இறப்பு அறிக்கை அசல் ம.சா.ஆ 2, 09.07.2022 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ 3, 09.07.2022 தேதியிட்ட M.V. Report TN-32-N-3884- TNSTC நகல் ம.சா.ஆ 4, 09.07.2022 M.V. Report TN-12-AQ-9669- Trailor Lorry நகல் ம.சா.ஆ 5, 03.08.2022 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ 6, மாற்று சான்றிதழ் - ADJ தர்மாம்பால் பாலிடெக்னிக் நகல் ம.சா.ஆ 7, 31.10.2022 தேதியிட்ட Sri Ganesh Interious Salary Certificate அசல்

ம.சா.ஆ 8, 2021-2022 வருமான வரி சான்று கணினி நகல் ம.சா.ஆ 9, 2022-2023 வருமான வரி சான்று கணினி நகல் ம.சா.ஆ 10, மனுப்படி தீர்ப்பாக பிராத்திகிறேன்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை பற்றி கேள்விபட்டேன். இந்த விபத்து சென்னை திருச்சி தேசிய நெடுங்சாலையில் நடந்தது. இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தானது அதிக போக்குவரத்து உள்ள தேசிய நெடுஞ்சாலையில் லாரியானது அதிக பாரத்துடன் கம்பிகள் ஏற்றி கம்பிகள் லாரியை விட்டு வெளியே நீட்டிக்கொண்டு இருந்தவாறு எந்தவித சமிக்கைகளும் இல்லாமலும் நின்றுக்கொண்டிருந்தது. அப்பொழுது தான் அந்த விபத்து ஏற்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் அதிக பாரத்துடன் லோடு ஏற்றி பிரதான தேசிய நெடுஞ்சாலையில் நின்றுகொண்டிருந்துதான் அதனால் இந்த விபத்திற்கு அரசு போக்குவரத்து ஓட்டுநர் கவனகுறைவோ, அஜாக்கிரதையோ காரணமில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் லாரி ஓட்டுநரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் என்பதாலும், விபத்து சமயம் 1வது எதிர்மனுதாரர் வாகனம் 5ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதால், 5ம் எதிர்மனுதாரர் நிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கேட்டுக்கொண்டுள்ள நஷ்ட ஈடு தொகை மிக அதிகம் என்பதால் கிடைக்ககூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம் /- V. சுந்தரராஜ், M.L.,
தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.